# வடபழனி மெட்ரோ ரயில் நிலையத்தில் புகைப்படக் கண்காட்சி



உலக புகைப்பட தினத்தையொட்டி, சென்னை வடபழனி மெட்ரோ ரயில் நிலையத்தில் வியாழக்கிழமை தொடங்கிய புகைப்பட கண்காட்சியை தொடங்கி வைத்து பார்வையிட்ட சென்னை மெட்ரோ ரயில் நிர்வாக இயக்குநர் (நிதி) சுஜாதா ஜெயராஜ்.

**சென்னை, ஆக.23:** வடபழனி மெட்ரோ ரயில் நிலையத்தில் புகைப்படக் கண்காட்சி வியாழக்கிழமை தொடங்கியது.

உலக புகைப்பட தினத்தையொட்டி, சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் மற்றும் சென்னை புகைப்பட அமைப்பு சார்பில் வடபழனி மெட்ரோ ரயில் நிலையத்தில் புகைப்பட கண்காட்சி வியாழக்கிழமை தொடங்கியது.

இந்த கண்காட்சியை சென்னை மெட்ரோ ரயில் நிர்வாக இயக்குநர்(நிதி) சுஜாதா ஜெயராஜ், பிரபல புகைப்படக் கலைஞர் ஜி.வெங்கட் ராம் ஆகியோர் தொடங்கி வைத்தனர். முதல் நாள் கண்காட்சியை ஏராளமான பயணிகள் மற்றும் பொதுமக்கள் ஆர்வமாக பார்வையிட்டனர்.

இக் கண்காட்சி குறித்து மெட்ரோ ரயில் நிர்வாக அதிகாரி ஒருவர் கூறியது:

ஆகஸ்ட் 29ஆம் தேதி வரை நடைபெறும் இந்தக் கண்காட்சி, தினசரி காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரை நடைபெறும். அனுமதி இலவசம். கண்காட்சியில், மெட்ரோ ரயில் நிலையத்தில் செய்யப்பட்டுள்ள அடிப்படை வசதிகள், பணிமனையில் நடைபெறும் பராமரிப்புப் பணிகள், சென்னை மாநகரில் மெட்ரோ ரயில் இயக்கப்படுவது உள்ளிட்டவை புகைப்படங்களாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இதற்காக சென்னை புகைப்பட அமைப்பை சேர்ந்த 38 பேர் கொண்ட குழுவினர், பல்வேறு மெட்ரோ ரயில் நிலையங்களில் சென்று 100 புகைப்படங்களை எடுத்துள்ளனர். மேலும், 'ஷூட் மெட்ராஸ்' என்ற தலைப்பில் புகைப்படப் போட்டி நடைபெற்றது. இதில் வெற்றி பெற்றவர்கள் எடுத்த புகைப்படங்கள் இந்த கண்காட்சியில் இடம்பெற்றுள்ளன என்றார் அவர்.